## சுருக்கம்

தொழில் – சர்க்கரைத் துறை – திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையினை ரூ.37.19 கோடி செலவில் நவீனப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.சி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.235

நாள் : 30.09.2015
மன்மத, புரட்டாசி –13
திருவள்ளுவர் ஆண்டு 2046

ஆணை:

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்க்கரைத் துறை தொடர்பாக கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சித் திட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்கள் :

"திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை 37 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து (National Cooperative Development Corporation) பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்".

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியினை தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து கடனாக பெறுவதற்கும் மாநில அரசின் நிதியினை பெறும் பொருட்டும் தகுந்த கருத்துருக்களை அரசுக்கு அனுப்புமாறும் சர்க்கரைத் துறை இயக்குநரை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
சர்க்கரைத் துறை இயக்குநர்,
690, அண்ணா சாலை,
நந்தனம், சென்னை –35.
நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை, சென்னை–9.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1)துறை, சென்னை– 9.
இ.கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. கலைச்செல்வி
பிரிவு அலுவலர் 30/9/2015

30/9/2015